
பண்ணாரி
நாயகி
கவிஞர் ச.கந்தசாமி

பண்ணாரி நாயகி

ச.கந்தசாமி

திருக்குறள் பேரவை, சென்னிமலை

ஆண்டு : முதற்பதிப்பு - 2026

நூல் பெயர் : பண்ணாரி நாயகி

நூல் அளவு : 1 x 8 (மெப்லித்தோ பேப்பர்)

ஆசிரியர் : ச.கந்தசாமி

வெளியீடு : திருக்குறள் பேரவை
சென்னிமலை
97889 04755

அச்சிட்டோர் : குறள் அச்சகம்,
ஈரோடு
8760382929

விலை : ரூ. 25.00

“செம்மொழிச் செம்மல்”
புலவர். **பெ.திருவள்ளுவர், எம்.ஏ., எம்.எட். எம்.ஃபில்.,**
தலைவர், திருக்குறள் பேரவை.
சென்னிமலை.

35, பிராட்டி அம்மன் கோவில் தெரு,
சென்னிமலை 638 051.

அணிந்துரை

பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். (கு. எ ; 975)

என்ற உலகப்பொதுமறையின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர் இந்நூலாசிரியர். மேனாட்டு அறிஞர் எமர்சன் என்பவர் “சிறந்த எண்ணங்களின் பதிவு தான் இலக்கியம்” என்று கூறியுள்ளார். “பண்ணாரி நாயகி” என்ற நூல் யாப்பிலக்கணப்படி, 40 வெண்பாக்களால் எழுதப்பட்ட சொல்நயம், பொருள் நயம். மிக்க அரும்பெரும் கவிதை நூலாகும்.

ஈரோடு மாவட்டம், பண்ணாரித்திருத்தலத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு பண்ணாரி அம்மன் திருவடிக்கு, நுண் மாண் நுழை புலம் மிக்க நூலாசிரியர், ஈரோடு மாவட்ட ஆட்சியர் தமிழ்த்திரு. ச.கந்தசாமி இ.ஆ.ப; அவர்கள் அணிவிக்கும் கவி மாலையாக இந்நூல் அமைந்துள்ளது

வண்ணமிகு எழில் கோபுரத்தின் வியத்தகு நல்வனப்பு, இறை நாட்டம் உடைய பெருமக்களைத் திருகோவிலினுக்குள்ளே நுழைய, ஈர்த்திழுப்பதுபோல, இந்நூலின்

திருப்பெயர் அம்பாளின் பெயராலேயே அமைந்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

இந்நூலாசிரியர் அருள்மிகு பண்ணாரி அம்மனின் திருக்கோலத்தை, அருஞ்சக்தியை, வழிபடவேண்டிய காரணத்தை, வழிபட்ட அடியார் பெருமக்கள் அடைந்த ஆனந்தம் முதலியவற்றைப் பாங்குடன் எளிய சொற்களில்,ஆழ்பொருளில், மரபுக்கவிதையால், அதிலும் குறிப்பாக வெண்பாக்களால் நாற்பது பாடல்களில் பாடியுள்ளார்.

முதலாவது பாடலில், "பாடப் பொருள் தந்த பண்ணாரி நாயகி" என்று குறிப்பிட்டுள்ளது திருத்தொண்டர் புராணத்தில், நூலாசிரியர் சேக்கிழார் சுவாமிகளுக்குத் தில்லைக்கூத்தன் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்துப்பாட வைத்ததை நினைவூட்டி மெய்சிலிர்க்கவைக்கிறது. தமிழின் தொன்மையை முந்துதமிழ் எனச்சுட்டியிருப்பது சிறப்புடையதாகும்.

அடியார்க்கு அவர் மனதில் எண்ணிய வரத்தை வழங்கும் அம்மன் என்பதைத் தெரிவிக்க, விண்ணுலகக் கற்பக மரத்தை நினைவுபடுத்தி, "கற்பகமாய் நின்றருளும் காரிகை" என்ற தொடர் அற்புதமாய் அமைந்துள்ளது .

மேலும் அம்மனின் சிறப்புகளை எடுத்துரைக்க, புல்லையும் பூ ஆக்குபவள், கல்லையும் உண்ணும் கனியாக மாற்றிடுவாள், சொல்லையும் மந்திரமாகச் செய்திடுவாள் என்ற தொடர்களைக் கையாண்டிருப்பது மிக நல்ல கற்பனையாகும்.

கண்ணாயிரம் கொண்டு காசினியைக் காப்பவள் என்ற உவமை உயர்வு நவிற்சியணியின் உதாரணமாக உவகை கொள்ளச்செய்கிறது .

இத்தகு போற்றுதற்குரிய பெருமை மிகு ஈரோடு மாவட்ட ஆட்சியர் கவிஞர் ச.கந்தசாமி இ. ஆ. ப. அவர்கள் பொறுப்பேற்ற நாள் (27.06.2025) முதல் தலைசிறந்த நிர்வாகியாக செயல்பட்டு வருகிறார். பொறுப்பேற்ற முதலாம் ஆண்டிலேயே (2025-26) +2 அரசுப்பொதுத்தேர்வில், தமிழக அளவில் ஈரோடு மாவட்டம் முதலிடத்தையும், அரசுப்பள்ளிகளின் தேர்ச்சி விழுக்காட்டில் முதலிடத்தையும் பெறுவதற்குப் பெருங்காரணமானவர். இலக்கியப் பற்றாளராகிய இவரின் திருக்குறள் பணிகளைப் பாராட்டி "தமிழ் மறைக்காவலர்" எனும் உயர் விருதினைத் தமிழமிழ்து அறக்கட்டளை வழங்கியுள்ளது பெருஞ்சிறப்பிற்குரியதாகும்.

தவிர நாவன்மையாளராக, நல்ல படைப்பாளியாகத் துடிப்புமிகு பல்துறை வித்தகராக, விளங்கி வரும் இவர் நாளும் நல்லன செய்து மேலும் உயர்ந்திட உளமார வாழ்த்துகிறோம். இவரின் ஐந்தாவது படைப்பாக வெளி வரும் "பண்ணாரி நாயகி" என்ற கவிதை நூல், படிப்பவர்க்குக் கழிபேருவகையுடன் பெறுதற்கரிய பெரும்பயனும் தருவது திண்ணம். இத்தகுநூலை அனைவரும் படித்து இன்புற்று வாழ்வாங்கு வாழ அருள்மிகு பண்ணாரி அம்மனின் பொற்பாதம் பணிந்து வணங்குவோம் .

சென்னிமலை.
12-07-2026

இவண்
(பெ.திருவள்ளுவர்}

பண்ணாரிநாயகி

பாடப்பொருள் தந்த பண்ணாரி நாயகிநான்
ஆடத்துணை நில்லென் அன்னையே; - நாடத்
தனிமுதலாய் நின்றருளும் தாயே; இனிக்கும்
கனியமுதே உன்னடியென் காப்பு. 1

அருட்கடலே உன்னுள் அலையாய் இருந்தேன்,
உருப்படவே உன்னடி தந்தெனை ஆட்கொண்டாய்;
பண்ணாரி அன்னையே பாராளும் நாயகியென்
கண்ணாரக் காட்சி கொடு. 2

உண்ணா துறங்கா துழல்கின்றேன் வாழ்வில்நான்,
பண்ணாரித் தாயே பதமெனக்குத் தந்தருள்வாய்;
விண்ணாளும் வாணிவரம் கொடுத்து ஓர்விளக்காய்
மண்ணான என்னையும் மாற்று. 3

வேல வனத்தில் விளையாடும் தேவதையே;
காலமெலாம் உன்னருகே காத்திருந்தேன் - மூலப்
பரம்பொருளே! முத்தியருள் பண்ணாரித் தாயே
வரம்தர வேண்டுகின்றேன் வா. 4

குண்டத்து நாயகியே, கானகத்து பண்ணாரி
அண்டத்தில் மூத்தவளே; அன்னையே - வண்டொத்த
கண்ணாலே பார்த்தெங்கள் காயங்கள் ஆற்றுகின்ற
பெண்ணாளே நல்குன் பதம். 5

வில்லாரும் வேந்தரும், வேறு பாடில்லாது
கல்லாரும் நன்குரூல் கற்றாரும் - எல்லாரும்
தேடிவந்து உன்னருளைத் தாவென்பார்; மாரியுன்னைப்
பாடிவந்தேன் பாரேன் பரிந்து. 6

வேல வனநிலத்தில் வேங்கை மரநிழலில்
கோல மயில்போல் குடிகொண்டு - ஞாலத்
தொளிவிளக்காய் நாயகி தோன்றுகின்றாள்; ஞானத்
தெளிவளிப்பாள் தக்கார் தமக்கு. 7

மானும் மயிலும் மலிந்திருக்கும் கானகத்தில்
தானும் அமர்ந்த தவக்கொழுந்தை, பண்ணாரி
மாரியெனும் பேரில் மகிழ்பவளை, இன்னருளை
வாரித் தருபவளை வாழ்த்து. 8

தெற்குத்திசை நோக்கித் தனித்திருக்கும் மாரியவள்
சொற்குவையால் பாடச் சிரித்திடுவாள் - பொற்குவையும்
தந்துபுகழ் தந்து தன்னருளும் தருவாள்
முந்து தமிழால் மொழி. 9



வேங்கை உலவும் வனம்நடுவே மாரியவள்
வேங்கை மரத்தடியில் வீற்றிருக்கும் - பாங்கை
அறிந்துவரம் கேட்டுவரும் அன்பருள்ளத் தைநன்
கறிந்து தருவாள் அருள். 10

பண்ணாரி மாரியவள் பாதம் பணிந்திடத்தான்
பண்ணாரி வந்துசெல்லும் பக்தரெலாம் - மண்ணாளும்
நாயகராய் வாழ்ந்திடுவார் நூறாண்டு;கண்மூடித்
தாயவளின் பாதம் தொடு. 11

ஞாலம் புரப்பதற்கே ஞாயிறாய்த் தோன்றியவள்
காலமெலாம் மக்களைக் காத்திடுவாள்; பண்ணாரி
மாரியவள் பாதம் பணிந்தால் நினைத்தநற்
காரியங்கள் கைகூடும் காண். 12



மண்ணின் வளம்காக்க மக்கள்நலம் காக்கப்
பெண்ணின் உருவெடுத்த பேரொளியே - கண்ணில்
குளிர்தரும் பண்ணாரி மாரியுன்னை எண்ணில்
ஒளிந்துவிடும் நெஞ்சத் திருள். 13

ஒளிரும் நிலவானாய் ஓங்கார மானாய்
களிறுலவும் கானகத்துத் தேவதையே பண்ணாரி
யம்மா உனைப்பணியும் அன்பர்க் கருள்வாயே,
சும்மா யிருக்கும் சுகம். 14

கற்பனைக் கெட்டாத காவியமே பண்ணாரி;
கற்பகமாய் நின்றருளும் காரிகையே - அற்புதங்கள்
ஆயிரம் நாளும் நிகழ்த்துகின்றாய் என்றறிந்தே
தாயிடம் வந்தடைந் தோம். 15

மாரியெனும் பேர்தாங்கி மாநிலத்தைக் காப்பவளே,
வாரியருள் தந்துநமை வாழ்விப்பாள் - பாரிலுள்ள
ஊர்களில்போய்த் தேடாதே; பண்ணாரித் தாயவளின்
வார்கழலே காக்கும் வணங்கு. 16

எங்குநீ சென்றாலும் எட்டாத காரியங்கள்
பங்குனி மாதத்தில் பண்ணாரி அம்மனைநீ
பார்த்துவந்தால் எட்டிவிடும்; பக்தர்கள் கூட்டத்தில்
சேர்ந்துவந்தால் சேரும் சிறப்பு. 17

மானும் மயிலும் மலிந்திருக்கும் பண்ணாரி;
தேனும் தினையும் படைத்து - நானும்
கரம்குவித்துத் தாயேநீ காவலெனச் சொன்னேன்,
வரம்கொடுத்து வாழ்வளிக்க வா. 18

மண்ணும் அவள்தான்; மரமும் அவளுருதான்
விண்ணும் விரியும் வெளியுமாய் - எண்ணும்
இடமெலாம் மாரி இருக்கின்றாள்; பக்தர்
மடமெலாம் தீர்ப்பாள் மகிழ்ந்து. 19

ஆத்தாளை; அன்பாய் அமர்ந்தே அகிலமெலாம்
காத்தாளைப் பண்ணாரிக் கானகத்தில் - பூத்தாளைப்
பாடிப் பணிந்திட்டால் பாவமெலாம் தீர்த்திடுவாள்;
நாடி நலம்பெறலாம் நம்பு. 20

பண்ணாரி மாரியவள் பேரருளைச் செந்தமிழ்ப்
பண்ணாகப் பாடுவதென் பாக்கியமே - பெண்ணாகக்
காட்சிதந்து மண்ணாளும் கண்மணியை எண்ணாமல்
மாட்சிவந்து சேராது மன். 21

மான்தோன்றும் கானகத்தில் மாசற்ற மாமணியாய்த்
தான்தோன்றி யாயுதித்த தாயவளை - தேன்போன்ற
செந்தமிழால் பாடச் சிரித்திடுவாள்; தந்தருள்வாள்
எந்தனுக்கும் மாறா எழில். 22

ஏற்றுவாள் மாரியெம்மை ஏகாந்த நன்னிலையில்;
ஆற்றுவாள் தன்னை அடிபணிந்தால்; - மாற்றுவாள்
தொட்டுவரும் துன்பநிலை: சாற்றுவேன் செந்தமிழால்
பட்டுவண்ணத் தாளைப் பணிந்து. 23

ஆங்காரி அன்னையே, பண்ணாரி மாரியம்மா;
தூங்காமல் உன்னைத் தொழுமெனக்குள் - ஓங்கார
நாதம் எழுகிறது நாளெல்லாம்; உந்தன்பொற்
பாதம் அடைந்தேன் பணிந்து. 24

சத்திய மங்கலம் சந்தனக் காட்டினிலே
நித்தியக் கன்னியாய் நிற்பவளே - முத்தியருள்
பண்ணாரித் தாயேநான் பண்ணிய பாவமெலாம்
தன்னாலே தீரவரம் தா. 25

தானாய் முளைத்தெழுந்த தாய்வடிவே பண்ணாரி;
வானாய் நிறைந்திட்ட வெண்மதியே - ஊனாய்
உயிராய் விளங்குகின்றாய்; வாழ்வினைக் கட்டும்
கயிறாய் விளங்குகின்றாய் கனிந்து. 26

பண்ணாரி மாரியம்மா பாருலகில் ஆணாகிப்
பெண்ணாகி அல்லாத வொன்றுமானாய் - புண்ணாகிப்
போனமக்கள் நெஞ்சிலுள்ள பேதங்களை நீக்கு
தான தவமோங்கத் தழைத்து. 27



உன்னருளை வேண்டி உலகமெலாம் ஆளுகின்ற
மன்னரும் வந்துநிற்பார் மக்களெலாம் வந்து
வணங்குகின்றார்; நாளும் உனைநாடும் எந்தன்
இணங்குகின்ற நெஞ்சி லிரு. 28

வண்ணமலர் நன்றான வாசமலர் தேடித்தேன்
உண்ணவரும் வண்டுகள் போலமக்கள் - விண்ணவரும்
போற்றுமெங்கள் பண்ணாரி மாரியினைத்தேடி வருவார்;
சாற்றுகின்றோம் செந்தமிழால் சேர்ந்து. 29

ஆயிரம்பேர் கொண்ட அண்டத்து நாயகிநூ
றாயிரம் மக்களுனை அன்னையாய்க் கொண்டுதினம்
ஆதரவு கேட்கின்றார்; அஞ்சிடாத வாழ்வுதனை
நீதர வேண்டும் நிலத்து. 30



அம்மா அருளரசி பண்ணாரி மாரியம்மா:
செம்மாந்த வாழ்வளிக்கும் சூலியம்மா - தெம்மாங்குப்
பாட்டெடுத்து தேவியுன்னைப் பாடென்றாய்; மாலையாய்ச்
சூட்டுகின்றேன் செந்தமிழ்ச் சொல். 31

புல்லையும் பூவாக்கும் பண்ணாரி மாரியம்மா
கல்லையும் உண்ணும் கனியாக மாற்றிடுவாய்;
சொல்லையும் மந்திரமாய்ச் செய்திடுவாய்; உன்னருளுக்
கெல்லையும் அண்டத்தில் ஏது. 32

நாடாத பேர்களுக்கும் நல்லருள் தந்திடுவாய்;
பாடாத நாளில்லை பண்ணாரி மாரியம்மா
நாடிவந்த எந்தனுக்கு நல்கிடம்மா இன்னருளைத்
தேடிவந்தேன் தாயுனைத் தான். 33



எண்ணாத நாளில்லை எங்கள் குலமாரி,
கண்ணாகக் காண்கின்றோம் காக்கவேண்டும் தாயம்மா,
பண்ணாரி என்றாலே போதுமம்மா; புண்ணான
நெஞ்சமும் போகும் நெகிழ்ந்து. *34*

காட்சிப் பொருளாய்க் கருத்துப் பொருளாயுன்
மாட்சியினை காட்டுகின்றாய் மாரியம்மா - மீட்சியும்
நீயே தருவாய் நிலத்திலென்று பாடிநின்றேன்
தாயே பதமெனக்குத் தா. *35*

இதமளிக்கும் காலை இளந்தென்றல் காற்றும்
பதமளிக்கும் தாயெங்கள் பண்ணாரி மாரியவள்
பேரருளின் முன்தோற்கும்; பாடுவோம் நாளும்நற்
பேறருளும் தாயைப் பணிந்து. *36*



குண்டம் இறங்கிக் குறையெல்லாம் நீங்கியபின்
அண்டத்து நாயகி அம்மையுன் - வண்டொத்த
கண்பார்த்த மக்கள் களிப்பெய்தி ஆடுகின்றார்;
விண்பார்த்த தைப்போல் வியந்து. 37

மண்ணில் முளைத்துவந்த மாரியினைப் பாடுவோம்;
கண்ணின் இமைபோலக் காப்பவளைப் பாடுவோம்;
தன்னைச் சரணமென்றால் துன்பமெலாம் தீர்த்துவிடும்
அன்னையைச் சேர்வோம் அறிந்து. 38

கண்ணாயிரம் கொண்டு காசினியைக் காப்பவளே
பண்ணாரி மாரியம்மா; உன்னிரு - கண்ணா
லெனைக்காண வேண்டுகின்றேன் ஏழை யென்தீய
வினையெல்லாம் மாற்று விரைந்து. 39

படைத்தாய் உலகெலாம் பண்ணாரி; நாடக்
கிடைத்தாய் எளியோர்க் கிறையாய்; - உடைத்தாய்
அருளமுதம் வற்றாத ஊற்றாயென் நெஞ்சத்
திருளகற்று தாயே இசைந்து. 40

ஆசிரியர் குறிப்பு :

- ச.கந்தசாமி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர், திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தவர்.
- தந்தை சங்கரசுப்பு, தாயார் மல்லிகா.
- தமிழ் இலக்கியத்திலும், பொது நிர்வாகத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மாநில குடிமைப் பணி அலுவலராக பணியாற்றியவர். 2024ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று இந்திய ஆட்சிப்பணி (I.A.S) அலுவலராக பணியாற்றிவருகிறார்.

ஆசிரியரின் பிற நூல்கள்

1. சென்பா நாற்பது – கீதம் பதிப்பகம்
2. மகளாற்றுப்படை – சுடர்விழி பதிப்பகம்
3. அகநக (வெண்பா விருந்து) – கோரல் பதிப்பகம்
4. சென்னிமலை வெண்பாமாலை – திருக்குறள் பேரவை



இந்நூலாசிரியர் அருள்மிகு பண்ணாரி அம்மனின் திருக்கோலத்தை, அருஞ்சக்தியை, வழிபடவேண்டிய காரணத்தை, வழிபட்ட அடியார் பெருமக்கள் அடைந்த ஆனந்தம் முதலியவற்றைப் பாங்குடன் எளிய சொற்களில்,ஆழ்பொருளில், மரபுக்கவிதையால், அதிலும் குறிப்பாக வெண்பாக்களால் நாற்பது பாடல்களில் பாடியுள்ளார்.

புலவர். **பெ.திருவள்ளுவர், எம்.ஏ., எம்.எட். எம்.ஃபில்.,**
சென்னிமலை.